https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

13th AUGUST 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 40

# 13 ஐ அமுல்படுத்த ஜனாதிபதியால் முடியாது



ரணில் விக்ரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதியாக இருப்பதால் அவரால் 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்று மொட்டு கட்சி தெரிவித்துள்ளது.

13 ஐ நடைமுறைப்படுத்துவதற்கும் அதிகார பகிர்வை வழங்குவதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார். தமிழ் கட்சிகளை அழைத்துப் பேசி வருகிறார்.

இந்தியா சென்ற ஜனாதிபதி இந்திய பிரதமர்

02



# பழுதடைந்த விமானங்கள் இறக்குமதி

குறைபாடுகள் உள்ளன என்று தெரிந்துகொண்டே பயிற்சி விமானங்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்றும்

அவற்றுள் இரண்டு விமானங்கள் வீழ்ந்து வெடித்துவிட்டன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2018இல் இவ்வாறு நான்கு விமானங்கள் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. குறைபாடுகள் உள்ளன

02

# இலங்கை போக்குவரத்து சபையில் ஒவ்வொரு மாதமும் ரூ.6 கோடி கொள்ளை

பஸ் டிக்கட் வழங்கும் விடயத்தில் தினமும் பாரிய ஊழல்,மோசடி இடம்பெறுவதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பஸ் சாரதிகளும் நடத்துனர்களும் இணைந்து

02






# 400 வாகனங்களை தேடி...

வாகன பதிவு திணைக்களத்தில் போலியாணமுறையில் பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ள அதி சொகுசு வாகனங்களை தேடி நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்குள்ள சில அதிகாரிகளின் உதவியுடன் 400 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு சுமார் 400 கோடி ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.



புதுசுடர்
www.puthusudar.lk
2023 AUGUST 13 - SUNDAY

# எப்படி சமாளிக்கப் போகிறார்?

இலங்கையின் அரசியல் தளத்தில் இப்போது அதிகம் பேசப்படுவது 13 ஆவது திருத்தச் சட்டம்-அரசியல் தீர்வு பற்றித்தான்.

அதுவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியா போய் வந்ததும் இந்தச் பேச்சு அதிகமாகியுள்ளது.இலங்கைக்கு இந்தியா எந்தவோர் உதவியை செய்வதற்கு முன்வந்தாலும் அந்நாடு முதலில் விதிக்கும் நிபந்தனையாக இருப்பது அல்லது கோரிக்கையாக இருப்பது 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான்.

அது இந்தியாவின் தலையீட்டால் கொண்டுவரப்பட்டது என்பதால் அந்த முறைமை இலங்கையில் இருக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

அந்த முறைமையால் வடக்கு-கிழக்கு பிரச்சினை தீருகிறதா இல்லையா என்பதை விட தனது ஆதிக்கத்துக்கு சான்றாக 13 என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும்.

அந்த வகையில் தற்போது இந்தியா சென்ற ஜனாதிபதியிடம் 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி கொடுத்துள்ளார்.

அதனால் இந்தியாவில் இருந்து திரும்பிய வேகத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வகட்சி மாநாட்டை கூட்டினார்.வடக்கு-கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரங்களைத் தவிர எல்லாவற்றையும் வழங்கப் போவதாக அறிவித்தார்.

இதை நடைமுறைப்படுத்தும்போது தெற்கில் இருந்து-சிங்கள மக்களிடமிருந்து எதிர்ப்பு வந்தால் அதை சமாளிப்பதற்காக-அதில் இருந்து தப்புவதற்காக ரணில் 13 இன் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்துள்ளார்.

13 என்பது ஜனாதிபதியுடன் தொடர்புபட்ட ஒன்றல்ல நாடாளுமன்றத்துடன் தொடர்புபட்டது. அதை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்று நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று கூறி ஜனாதிபதி இப்போது பந்தை அந்தப் பக்கம் திரும்பியுள்ளார்.

இது தொடர்பில்-13 ஐ அமுல்படுத்துவது தொடர்பில் கட்சித் தலைவர்கள் அவர்களின் யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு 2 வார கால அவகாசமும் வழங்கியுள்ளார் ஜனாதிபதி.
அந்த யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

ஒருவேளை, நாடாளுமன்றத்துக்குள் 13 இற்கு எதிரான நிலைப்பாடு அதிகமாக இருந்தால் நாடாளுமன்றத்தின் தலையில் போட்டுவிட்டு தமிழ் மக்களிடமிருந்து ரணில் தப்பிவிடுவார்.

ஒருவேளை,13இற்கு ஆதரவான நிலைப்பாடு அதிகமாக இருந்தால்-அதை சிங்கள மக்கள் எதிர்த்தால் அதையும் நாடாளுமன்றின் தலையில் போட்டுவிட்டு சிங்கள மக்களிடமிருந்து தப்பிவிடுவார்.

இந்தியாவுக்கும் இதே வேலையைச் செய்வார்.இதனால் 13 இன் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.13 அமுல்படுத்தப்படுமா ? செயலற்றுக் கிடக்கும் மாகாண சபைகளை மீண்டும் இயக்குவதற்காக தேர்தல் நடத்தப்படுமா என்ற கேள்விகள் இப்போது எல்லோரது மனங்களிலும் எழுந்துள்ளன.

உண்மையில் 13 ரணிலுக்கு இப்போது தேவைப்படுவது வடக்கு-கிழக்கு தமிழர்களின் வாக்குகளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொள்வதற்காகத்தான்.இல்லையென்றால் அவரும் இதுபற்றிப் பேசமாட்டார்.

பொருளாதாரரீதியில் நாடு வீழ்ந்து கிடக்கும் இந்த நிலையில் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கே கவனம் செலுத்த வேண்டும்இப்போது அதிகாரப் பகிர்வுபற்றியெல்லாம் பேச முடியாது என்று கூறிவிட்டு ரணில் சென்றிருப்பார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் அவருக்கு கடும் சவாலாக அமைந்துள்ளதால் வடக்கு-கிழக்கு தமிழர்களின் வாக்குகள் அவருக்கு கட்டாயம் தேவை. அதனால்தான் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அரசியல் தீர்வுபற்றி பேசுகிறார்.அதற்கான செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளார்.

இருந்தும்,இது ஒரு நாடகம். ஜனாதிபதி தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை குறிவைத்த செயற்பாடு என்று உணர்ந்ததால் கஜேந்திரன் பொன்னம்பலத்தின் கட் சி இந்த வேலைத்திட்டத்திற்குள் வரவில்லை. அவர்கள் விலகி நிற்கிறார்கள்.

அதேபோல்தான் மொட்டு கட்சியும். அவர்களும் 13 அமுல்படுத்துவத்தைக் கடுமையாக எதிர்க்கிறார்கள்.மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதிக்கு இதை அமுல்படுத்தும் அதிகாரம் இல்லை என்கிறார்கள்.

ஆகவே,13 ஐ அமுல்படுத்துவதில் பெரும் சிக்கலை எதிர்நோக்கப் போகிறார்.இதை சமாளிக்கப்போகிறார் என்று பார்ப்போம்.

# இலங்கையை ஊக்கப்படுத்தும் முயற்சி

பெருமதிப்பிற்குரிய வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வாகவும் மற்றும் இலங்கையின் மிகப் பழமையான மற்றும் மிகப்பாரிய TEDx நிகழ்வுகளில் ஒன்றுமான TEDxColombo, மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 12 வது நிகழ்வை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. 2023 ஆகஸ்ட் 27 அன்று, புகழ்பெற்ற Monarch Imperial இல் இடம்பெறவுள்ள TEDxColombo மீண்டும் சிந்தனைகளைத் தூண்டி, ஆழமான கலந்துரையாடல்களை வளர்க்கும் என்பதுடன், நாடு முழுவதும் ஒற்றுமை உணர்வையும் தூண்டும். இந்நிகழ்வு பரந்த சமூகத்தை எட்டி, பயனளிப்பதற்காக, முன்னணி சமூக வலைத்தளங்களில் நேரலையில் ஒளிபரப்பப்படும்.

2009 இல் ஸ்தாபிக்கப்பட்ட TEDxColombo, தொடர்ச்சியாக சிந்தனைகளின் ஆற்றலை வழிநடாத்தி, அசாத்திய திறமை கொண்ட உள்ளூர் பேச்சாளர்களை மேடைக்குக் கொண்டு வந்து, அவர்களின் உரைகளை உலகெங்கிலும் ஒலிக்கச் செய்துள்ளது. அவர்களுடைய செல்வாக்குமிக்க உரைகள் உலகளாவிய TED தளத்தில் பல மில்லியன் கணக்கானவர்கள் பார்ப்பதற்கு காணொளிகளுடன், அருகாமையிலும், தொலைவிலும் உள்ள சமூகங்கள் மத்தியில் உரையாடல்களைத் தூண்டி, மாற்றத்திற்கு வித்திட்டுள்ளன.

இந்த வருடத்தின் கருப்பொருளான "R-Evolution" அமைந்துள்ளதுடன், TEDxColombo ஆனது, தைரியமான கருத்துக்களை ஆதரிக்க தனிநபர்கள் ஒன்றிணைந்து, சிறந்த எதிர்காலத்திற்கான வரையறையற்ற சாத்தியக்கூறுகளைத் தொடங்கும்போது வெளிப்படும் புரட்சிகரமான ஆற்றலை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபடும். தொலைதூர இயக்கங்களின் தாக்கம் முதல் உலகளவில் மக்களை ஒன்றிணைத்த புரட்சியின் உணர்வு வரை, நமது சமூகம் எடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத அடுத்த படியை கற்பனை செய்ய நவீன மாற்றத்தை உருவாக்குபவர்களுக்கு இந்த நிகழ்வு சவால் விடும். இந்தக் கருத்துக்கள் தனிமனித வாழ்வில் மட்டுமின்றி, நமது சமூகத்தின் கூட்டு முன்னேற்றத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த வல்லது.

TEDxColombo இன் ஏற்பாட்டாளரான சஃப்ரா அன்வர் அவர்கள், இடம்பெறவிருக்கும் நிகழ்வைப் பற்றி தனது கருத்தினை உற்சாகத்துடன் வெளிப்படுத்துகையில், “நாம் திட்டமிட்டுள்ள ஆழமாக ஈர்க்கும் அற்புதமான அனுபவம் பார்வையாளர்களின் சிந்தனையைத் தூண்டி, வழமைக்கு அப்பால் சிந்திக்க அவர்களைத் தூண்டும். சிறந்த எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஆர்வமுள்ள ஒருமித்த சிந்தனை கொண்ட நபர்களுடன் தொடர்புகளை உருவாக்கி, கலந்துரையாடல்களில் காத்திரமாக பங்கேற்று, உத்வேகம் அடைய விரும்பும் அனைவரையும் நாங்கள் அழைக்கிறோம்,” என்று குறிப்பிட்டார்.



## இலங்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் கொள்ளையில் ஈடுபடுகின்றனர் என்றும் இதனால் தினமும் 20 லட்சம் ரூபா கொள்ளையிடப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு மாதம் 6 கோடி ரூபா கொள்ளையிடப்பட்டு வருகிறது.டிக்கட் பரிசோதகர்கள் சிலரும் இவர்களுடன் சேர்ந்து இந்த மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பரிசோதகர்கள் குழுவை கலைத்துவிடுமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

## பழுதடைந்த...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

என்று தெரிந்துகொண்டே இறக்குமதி செய்யப்பட்டன.

அதில் இரண்டு வீழ்ந்து வெடித்துவிட்டன.மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## 13ஐ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மோடியிடம் இதை அமுல்படுத்துவதாக வாக்குறுதியும் வழங்கியுள்ளார்.

சர்வகட்சி மாநாட்டை கூட்டி இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்.13 ஐ அமுல்படுத்துவதற்கான யோசனையை கட்சிகளிடம் இருந்து கோரியுள்ளார் ஜனாதிபதி.

இந்தநிலையில்,இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் மொட்டு கட்சி 13 ஐ அமுல்படுத்துவதற்கான அதிகாரம் ரணிலிடம் இல்லை என்று கூறியுள்ளது.








# வெளியே சிதறிய குடல்:

# - ஏறாவூர் படுகொலையின் ஒரு துளி...!!!

## தண்ணீர் கேட்டவரின் நாக்கை வெட்டிய புலிகள்:

33 வருடங்களை அடைந்துவிட்டோம்.

புலிகளின் அந்தப் படுகொலை இடம்பெற்று...121 அப்பாவி உயிர்கள் பறிக்கப்பட்டு...

நினைத்துப் பார்க்க முடியா திகில் அது.

பயங்கரமான இரவு...!!!

கும்மிருட்டு.எங்கும் இருட்டு.கரண்ட் இல்லை சில மாதங்களாக..

ஒவ்வோர் இரவும் இப்படியே...!!! பயங்கரம்-அச்சம்.

இரண்டாம் கட்ட ஈழப் போர் தொடங்கியதில் இருந்து... காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை இடம்பெற்றதில் இருந்து...

நீண்ட சம்பவங்கள். நிறைய சம்பவங்கள்.

எல்லாவற்றையும் எழுத முடியாது.ஒரு தொடர் போதாது.

அதனால்....

நேரே செல்வோம் அந்த இருளுக்குள். படுகொலை இரவுக்குள்.

பிரதானமாக ஐந்து இடங்களில் சம்பவம். புலிகளின் கொலை வெறியாட்டம்.

01 - ஏறாவூரின் மேற்குப் பகுதியான சுரட்டையன்குடா.

02 - வைத்தியாசாலை முதல் அலிகார் பாடசாலை வரையான புன்னைக்குடா வீதி.

03 - அதே வைத்தியசாலை முதல் அலிகார் விளையாட்டு மைதானம் வரையான பகுதி. கிழக்கை நோக்கிய பகுதி.

04 - அக்பர் பள்ளிவாசல் பகுதி.

05 - சதாம் ஹுசைன் பகுதி.

இரவு 11 மணி இருக்கும்.

ஒரு வெடில். ஒரேயொரு வெடில்.

தமிழர் பகுதிக்குள்.ஏறாவூர் நீதிமன்றம் அமைந்துள்ள பகுதிக்குள்...

அவ்வளவுதான்...

கொதிகொள்கிறது ஊர்.அச்சத்தால்...

எதிர்பார்த்திருந்தது அல்லவா.

சரி....

அது புலிகள்தான்.

உடனே வெளியேறுகிறார்கள் மக்கள். சுரட்டையன்குடா பகுதி மக்கள்.நடுப்பகுதியை நோக்கி...

காரணம்...அந்தப் பகுதியில்தான் அந்த வெடில்...

சுரட்டையன்குடா எல்லையில் இருந்து இருநூறு,முன்னூறு மீற்றர் தூரத்தில்தான் அந்த வெடில்.

வெடில் கேட்டு ஓரிரு நிமிடம்தான்...

புலிகள் இப்போது உள்ளே.. சுரட்டையன்குடா பாலத்தில்.

பிரிகிறார்கள் இரண்டாக...!!!

ஒரு குழு பாலத்தின் பின்புறமாக... ஆற்றங்கரை பக்கமாக...

அடுத்த குழு அதற்கு எதிரே...

இந்தக் குழுவிடம் சிக்குகிறார் உசனார் எனப்படும் வெள்ளைத்தம்பி.கூடவே அவரது மகனும்.4 வயது மகன்.

இவர்கள் இருவரும்தான் முதல் பலி. புலிகளின் மாமிச வேட்டையின் முதல் இரை.

அதேநேரம்...

அடுத்த குழுவிடம் சிக்குகிறது மஹ்மூத் லெப்பை வட்ட விதானையின் குடும்பம்.

அதில் மஹ்மூத் லெப்பை அந்த இடத்திலேயே சரி.

அவரது மனைவி-பேத்தி ஜாஹிரா அமீன் காயம்.

ஜாஹிரா படுகாயம்.

இரண்டு சம்பவங்களும் ஒரே நேரத்தில்...

அடுத்து...?

நடக்கிறது வேட்டை.

சிதறி ஓடுகிறார்கள் மக்கள் நாலா பக்கமும். விரட்டிச் செல்கிறார்கள் புலிகள்.

சுடுகிறார்கள் விரட்டி..விரட்டி...

ஒருவர் கழிவறைக்குள்.

மறைக்கிறார் வாளியால்...

பதம் பார்க்கின்றன புல்லட்கள் தலையை. அந்த வாளியை உடைத்துக்கொண்டு...

வாசலில் இன்னொருவர்.வீழ்ந்து கிடக்கிறார் மல்லாக்க.குடல் வெளியே..

“குடல அள்ளிவச்சு கட்டுங்க...“

சத்தம் வைக்கிறார் வேதனையில்...

யாரால் நெருங்க முடியும்...!!!!

அவரது தலைமாட்டில் ஜாஹிரா.

இவரும் வேதனையில்...அவரும் வேதனையில்...

யாருக்கும் யாரும் உதவ முடியா நிலை.

தண்ணீர் கேட்டு கத்துகிறார் இன்னொரு சகோதரர் நாசர்.

## சிதறி ஓடிய மக்கள்: விரட்டி விரட்டி சுட்ட புலிகள்:

தண்ணீரோடு செல்கிறார் ஒரு தாய்.

தண்ணீர் கேட்ட நாக்கை வெட்டுகிறார்கள் புலிகள்.தண்ணீர் கொண்டு சென்ற தாயும் சரி.

புலிகளுக்கு ஏசுகிறார் அந்தத் தாய்.

ஏசிய நிலையிலேயே பிரிகிறது அவரின் உயிர்.

அதேநேரம்,நாசரின் உயிரும்...

அடுத்து ...???

நுழைகிறார்கள் இன்னொரு வீட்டுக்குள். ஜலால்தீன் அதிபரின் வீடு.

ஆண்கள் யாரும் இல்லை.எல்லோரும் வெளி ஊர்களில்...

பெண்கள் மாத்திரமே அங்கு.கூடவே ஆண் என்று கடைசி மகன் அக்பர் மாத்திரமே.3 வயது.

அத்தனை பெண்களும் சரி.

தப்புகிறான் அந்த சிறுவன் மாத்திரம்.

இப்படித் தொடர்கிறது கொலை வெறியாட்டம்.அப்பகுதியில்...

20இற்கு மேற்பட்டோர் பலி.

அடுத்த வெறியாட்டம்...?

ஏறாவூர் வைத்தியசாலை பகுதி முதல் அபுசாலி தைக்கா பள்ளிவாசல் வரையான பகுதிக்குள்.

ஆரம்பமாகிறது முத்துவாப்பா ஆசிரியரின் குடும்பம்,நாவையடி கடை மில் காவலாளி ஆகியோரில் இருந்து...

அதே தொடரில் டாக்டர் அஹமட் பரீத் வித்தியாலய அதிபர் சக்கூர் சேரின் வாப்பா,மூத்த வாப்பா,மூத்த உம்மா.

சுட்டுப் போடுகிறார்கள் வீதியிலேயே... புன்னக்குடா வீதியில்...

அப்படியே நகர்ந்து...

ஜிப்ரி தைக்கா பள்ளிவாசலுக்கு அருகில். அங்கு சில இளைஞர்கள்.அவர்களும் சரி.

இறுதியாக கலாநிதி அமீர்தீன் சேரின் குடும்பம்.அதில் 18 பேர்.

தனி மரமாகிறான் அந்தச் சிறுவன். தாய்,தந்தை,சகோதரிகள் என எல்லோரையும் இழந்து...

அமீர்தீனின் மருமகன் நியாஸ்.. [Conductor -Eravur CTB ]

அடுத்து...???

வைத்தியசாலை முதல் அலிகார் மைதானம் வரையான பகுதி.

அங்கும் வெறியாட்டம்.

நகருகிறார்கள் அங்கிருந்து அக்பர் பள்ளிவாசலை நோக்கி...

9 பேர் பலி அப்பகுதியில்.

பள்ளிவாசல் தலைவர் அலி முஹம்மட்டின் வீட்டில் நால்வர்.

பள்ளிவாசலுக்கு முன்பாக மூவர்.

பள்ளிவாசல் கிணற்றடியில் இருவர்.

அடுத்த கொலை வெறியாட்டம்...???

சதாம் ஹுஸைனில்...இறுதி வேட்டை....

அத்தோடு முடிகிறது புலிகளின் வேட்டை. அன்றைய இரவு வேட்டை.

மொத்தம் 121 உயிர்கள்.

நான் இங்கு எழுதி இருப்பது ஒரு துளியையும் விடக் குறைவான அளவுதான்.

கடல்போல் குவிந்து கிடக்கின்றன சம்பவங்கள்.

அவை அனைத்தும் விரைவில்....

(ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்)



**நுழைகிறார்கள் புலிகள் இன்னொரு வீட்டுக்குள்.ஜலால்தீன் அதிபரின் வீடு.**
**ஆண்கள் யாரும் இல்லை.எல்லோரும் வெளி ஊர்களில்...**
**பெண்கள் மாத்திரமே அங்கு.கூடவே ஆண் என்று கடைசி மகன் அக்பர் மாத்திரமே.3 வயது.**
**அத்தனை பெண்களும் சரி.**
**தப்புகிறான் அந்த சிறுவன் மாத்திரம்.**
**இப்படித் தொடர்கிறது கொலை வெறியாட்டம்.அப்பகுதியில்...**
**20இற்கு மேற்பட்டோர் பலி.**



# பிரபா கொல்லப்பட்டது இப்படித்தான்...!!!

# கழுத்தளவு நீரில் நின்று கதையை முடித்தபடையினர்

தொடர் 13



## பிரபாவின் இறுதி நிமிடம்...!!



ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

நிறுத்துகிறார்கள் சுடுவதை...

தேடுதலை மேற்கொள்ளுமாறு உத்தரவிடுகிறார் அமில் குமார.

கரையறுக்கிறார் அவர்.பங்கருக்கு வருகிறார்.

தேடுதல் இடம்பெறுகிறது.

நேரம் காலை 5.30.

சிக்குகின்றன 3 உடல்கள்.புலிகளின் உடல்கள்.

படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சிக்கி மரணித்தவர்கள்.

மிதக்கின்றன அந்த வாவியில்....

கொண்டு வருகிறார்கள் வெளியே... கரைக்கு...

சோதிக்கிறார்கள்...

சிறு வித்தியாசம் அந்த உடல்களில்...

பிரபாகரன் உள்ளே இருக்கிறார் என்பதைக் காட்டிக் கொடுத்ததே அந்த உடல்கள்தான்.

எப்படி தெரியுமா..?

ஒருவரின் உடலில் ஒரு பை.அதற்குள் அதிகமான மருந்துப் பொருட்கள்.

காயங்களை ஆற்றுவதற்காக.

அவர் டாக்டராக இருக்க வேண்டும்.

அடுத்தது அவர்களிடம் இருந்த துப்பாக்கிகள்.

அவை வித்தியாசமானவை.

திருத்தி அமைக்கப்பட்ட T 56 துப்பாக்கிகள்.

NIGHT BIONO, TRACE போன்றவை பொருத்தப்பட்டு...

VIP ஒருவருக்கு பாதுகாப்பு வழங்கும் துப்பாக்கிதான் இது.

அப்படியென்றால் பிரபா இதற்குள்தான் இருக்க வேண்டும்.

ஊகிக்கிறார்கள் படையினர்.

அதுவரை பிரபா அதற்குள் இருக்கிறாரா,இல்லையா என்று தெரியாது படையினருக்கு...

இந்த உடல்களை–ஆயுதங்களை பார்த்த பின்தான் முடிவெடுக்கிறார்கள் படையினர்.

“பிரபா உள்ளேதான்..“

தளபதிகளிடம் இதை எத்திவைக்க... உத்தரவிடுகிறார்கள் தேடுதலுக்கு.

இப்போது அங்குள்ள சிறு சிறு வாவிகளில்–கண்டல் தீவுகளில் தேடுதல்.

அதனால் இடைநிறுத்தப்படுகிறது இவர்களின் தேடுதல்...

காலை 8 மணி.

முடிகிறது அந்தத் தேடுதல்.

நாடு பூராகவும் போர்வெற்றி கொண்டாட்டம்.

மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில்...பால் சோறு உண்டு.

அதே கொண்டாட்டத்தில் மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவும்...

பால் சோறு சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார். முகாமுக்குள்...

தொலைபேசி அழைப்பு ஒன்று கேணல் ரவி பிரியவிடம் இருந்து..

“சேர்.. வாவிக்குள்ள இன்னும் ஆட்கள் இருக்காங்க.குயிக்கா வாங்க..““

கேட்டதும் மகிழ்ச்சி கமாலுக்கு...

அது பிரபாகரனாக இருந்துவிட வேண்டும்.

பறக்கிறார் ஜீப்பில் ஏறி அந்த இடத்துக்கு. நந்திக்கடலுக்கு..

பால் சோற்று பீங்கானை தள்ளி வைத்துவிட்டு...

கமால் இப்போது களத்தில்.தேவையான அறிவுரைகளை வழங்கிக்கொண்டு...

படையினர் மீண்டும் வாவிக்குள். பிரபாவைத் தேடி...

ஒரேயொரு 8-MEN TEAM மட்டும்.

சார்ஜன் முத்துபண்டாவின் தலைமையில்...

இன்னொரு 8-MEN TEAM கரையில்.

சார்ஜன் விஜயசிங்க தலைமையில்... சுநுளுநுசுஏநு இல்...

கரையில் இருந்து சுமார் 400 மீற்றர் தூரம்..

நகருகிறார்கள்.மெல்ல மெல்ல.கண்டல் தாவர பகுதியை நோக்கி...

அதை நெருங்குவதற்கு சுமார் 30 மீற்றர் தூரம்தான்...

வருகின்றன வெடில்கள் அதற்குள் இருந்து...

ஆம்...

புலிகள் அதற்குள்...

நடக்கிறது சண்டை இப்போது.

படையினர் நீருக்குள்.கழுத்தளவு நீர்.

மறைவதற்கு இடமில்லை.ஓபன் ஏரியா.

புலிகளோ பாதுகாப்பான இடத்தில்.

மரங்களுக்கு இடையில்...புதர்களுக்கு இடையில்...

பரஸ்பரத் தாக்குதல்.கடும் தாக்குதல்.

கை குண்டுகளை வீசுகிறார்கள் புலிகள். படையினரை நோக்கி...

வீழ்கின்றன நீருக்குள்.வெடிக்கின்றன அதற்குள்ளேயே..

படையினருக்குப் படுவதாக இல்லை. ஒன்றுகூட...

நீரின் அடர்த்தி...நீரின் ஆழம் காரணமாக...

வெடில்களும் அப்படியே...

ஒன்றுகூடப் படுவதாக இல்லை.

மூர்க்கத்தனமாகத் தாக்குகிறார்கள் படையினர்.

இருந்தும்,ஒரு சிக்கல் படையினருக்கு...

என்ன அது..???

முடிகிறது தோட்டாக்கள்.

ஆபத்தான கட்டம் இது.

அறிவிக்கிறார் முத்துபண்டா அமில் குமாரவுக்கு...

கரையில் தயார் நிலையில்.அடுத்த டீம். சார்ஜன் விஜயசிங்கவின் தலைமையில்...

பறக்கிறார்கள்.தோட்டாக்களை எடுத்துக்கொண்டு...

இப்போது எண்ணிக்கை அதிகம்.

8 உம் , 8 உம் 16.

பலம் அதிகம் படையினருக்கு.

வீரியமடைகிறது சண்டை.

இருந்தும்,மீண்டும் முடிகின்றன தோட்டாக்கள்.

இப்போது இறங்குகிறார் அமில் குமார தோட்டாக்களுடன்...

40 மகஸின்கள்.தோட்டா பெட்டி ஒன்று,கைக்குண்டு பெட்டி ஒன்று..

அவருடன் மேலும் மூவர்.

பகிர்ந்தளிக்கிறார்கள் தோட்டாக்களை–குண்டுகளை.

தொடர்கிறது சண்டை.

இப்போது 20 படையினர் சண்டையில்..

அடித்துக்கொண்டு செல்கிறார்கள் உள்ளே.கண்டல் தாவரங்களுக்குள்ளே...!!!

சுமார் 45 நிமிட தொடர் சண்டை.

அப்படியே நிற்கிறது சமர்.

எந்தத் தாக்குதலும் இல்லை. புலிகளிடமிருந்து...

தேடுதல் வேட்டை இப்போது.

திடீரென...

சத்தம் வைக்கிறார் முத்துபண்டா.

“ சேர்..பிரபாகரன்போல் உருவம் இங்கே..“

“பிரபாகரனா...?“

நம்ப முடியவில்லை அமில் குமாரவினால்....

“எதற்கும் வெளியே எடுத்து வாருங்கள்.“

உத்தரவிடுகிறார் முத்துபண்டாவுக்கு...

இழுத்துக்கொண்டு வருகிறார் முத்துபண்டா.புதர்களுக்கு வெளியே...

தலையை உயர்த்திப் பார்க்கிறார் அமில். அந்த உடலின் தலையை...

என்ன ஆச்சரியம்...!!!

தொடரும்....



“சேர்.. வாவிக்குள்ள இன்னும் ஆட்கள் இருக்காங்க.குயிக்கா வாங்க..““

கேட்டதும் மகிழ்ச்சி கமாலுக்கு...

அது பிரபாகரனாக இருந்துவிட வேண்டும்.

பறக்கிறார் ஜீப்பில் ஏறி அந்த இடத்துக்கு. நந்திக்கடலுக்கு..

பால் சோற்று பீங்கானை தள்ளி வைத்துவிட்டு...

கமால் இப்போது களத்தில்.தேவையான அறிவுரைகளை வழங்கிக்கொண்டு...

படையினர் மீண்டும் வாவிக்குள்.பிரபாவைத் தேடி..



# ஆள் இல்லாத கடையில்...

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான நிறுவனம் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கி வருவதாகவும் அந்த நிறுவனத்தை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்றும் சிவில் விமானத்துறை அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா கூறி வருகிறார்.

இருந்தாலும்,ஆட்சேர்ப்புக்கு மாத்திரம் பஞ்சமில்லை.

புதிதாக விமான பணிப்பெண்களை இணைத்துக்கொள்ளுமாறும் அதற்கான நேர்முகப் பரீட்சையை நடத்துமாறும் அமைச்சரின் செயலாளர் ஒருவர் நிறுவனத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளாராம்.

ஒருபுறம்,நிறுவனம் நஷ்டத்தில் இயங்குகிறது.மறுபுறம்,விமானிகள் நிறுவனத்தை விட்டு விலகிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில்,எதுக்குப்பா வேலைக்கு ஆள் எடுக்குறீங்க என்று கேட்கிறார்கள் சில எம்பிக்கள்.ஆள் இல்லாத கடைல எதுக்குடா டீ ஆத்துறீங்க...?





## தபேலா வாசித்த மனுஷ

ஜப்பானிய தூது குழுவொன்று ஒரிரு நாட்களுக்கு முன் ஜனாதிபதியை சந்தித்தது. பின்னர் அவர்களுக்கு இரவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்த விருந்து இடம்பெற்றது அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்குச் சொந்தமான உணவகத்தில்.

ஜப்பான் மற்றும் இலங்கை பாடல் கலந்து அந்த நிகழ்வு சிறப்பிக்கப்பட்டது.

அந்த நிகழ்வில் மனுஷ தபேலா வாசித்தார்.ஜப்பானிய குழுவினர் பாடல் பாடினர்.



## உடன் நிறுத்துங்கள்

மொட்டு கட்சிக்கு எதிராக–ரணிலுக்கு ஆதரவாக நிமால் லன்சாவால் உருவாக்கப்பட்டு வரும் கூட்டமைப்புக்கு தனது எதிர்ப்பை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார் பசில் ராஜபக்ஸ.

ஜனாதிபதியை நேரில் சந்தித்து இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளார் .

“உங்களை ஜனாதிபதியாக்கியது மொட்டு கட்சி.அந்தக் கட்சியை அழிக்கும் வேலையைச் செய்ய வேண்டாம்” என்று காட்டமாகக் கூறினாராம் பசில்.



## அமைச்சரின் மகள்மார் இருவர் அந்த பட்டியலில்...

2022 இல் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற வ 20 உலக கிண்ண போட்டியில் கலந்துகொள்வதற்காக இலங்கை கிரிக்கட் சபை 35 பேரை அனுப்பியது என்றும் அதற்காக 68 மில்லியன் ரூபா பணத்தை செலவு செய்தது என்றும் கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் அந்த பட்டியலில் அமைச்சர் ஒருவரின் மகள்மார் இருவர் உள்ளடக்கப்பட்டமைதான்.

இவர்களுக்கான விசாவுக்கு விண்ணப்பிக்கும்போது தனிப்பட்ட நபர்களுக்கான செலவை கிரிக்கட் சபை ஏற்காது என்று கிரிக்கட் சபை அவுஸ்திரேலிய தூதரகத்துக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இருந்தும்,நடிகை ஒருவரும் அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தாராம்.

## படம் பார்க்கச் சென்ற மஹிந்த



கொழும்பு வெள்ளவத்தை சவோய் திரையரங்கில் திரையிடப்பட்ட சிங்கள திரைப்படம் ஒன்றை சில நாட்களுக்கு முன் சென்று பார்த்துவிட்டு வந்தார் மஹிந்த ராஜபக்ஸ.

அது அந்தத் திரைப்படத்தின் வெளியீட்டு தினம். அவருக்கு விடுக்கப்பட்ட விசேட அழைப்பை ஏற்று திரைப்படத்தை பார்த்து ரசித்துவிட்டு வந்தார்.

## பசில் நல்லா பயந்து...

நிமல் லான்சா தலைமையில் உருவாக்கப்படும் அரசியல் கூட்டணி தொடர்பில் பேசுவதற்காக அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கொழும்பு இல்லத்தில் எம்பிக்கள் பலர் கடந்த வாரம் ஒன்றுகூடினர்.

நிமால் சிறிபாலடி சில்வா,ஜோன் செனவிரத்ன,அனுர யாப்பா,சுசில் பிரேமஜயந்த,நிமல் லான்சா,நலின் பெர்னாண்டோ, லசந்த அழகிய வண்ண, பிரியங்கர ஜயரத்ன மற்றும் துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அங்கு பேசிய பிரிங்கர ஜயரத்ன சொன்னார் , கூட்டமைப்பு உருவாக்கம் காரணமாக பசில் நல்ல அச்சத்தில் உள்ளார் என்று.அதனால்தான் கூட்டமைப்பு உருவாக்கும் வேலையை கைவிடு மாறு ஜனாதிபதி யிடம் கெஞ்சி இருக்கிறார் என்று.



## ஜனாதிபதி செயலகத்தில் தனி அறை அவருக்கு

நிமல் லான்சா எம்பிக்கு ஜனாதிபதி செயலகத்தில் தனி அறை ஒன்று வழங்கப்பட்டுள்ளதாம்.அது எதற்கு தெரியுமா?

2024 ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கான பணிகளை செய்வதற்காகவாம்.

ஏற்கனவே இதற்காக ராஜகிரியாவில் அலுவலகம் ஒன்றையும் திறந்துள்ளார்கள்.அது லன்ஸாவின் தலைமையில்.

ரணிலை வெல்ல வைப்பதற்காக கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கவுள்ளார் லன்சா. அதற்கான வேலைகள்-சந்திப்புகள் எல்லாம் அங்குதான் இடம்பெறுகிறது.

இதற்கு மேலதிகமாக ஜனாதிபதி செயலகத்தில் அவருக்கு அலுவலகம் வழங்கப்பட்டுள்ளதாம்.



தொடர் - 07

# இலங்கையில் சிறுபான்மையினர் புறக்கணிப்புக்களும் சுதந்திர சமத்துவமின்மையும்!

## - ஒரு வரலாற்றுப் பார்வை -



- சின்னத்தம்பி குருபரன் -

சிறுபான்மையினர் நலன் தொடர்பாகப் "பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும்" கீரோ. வில்லன் செயற்பாடுகளுக்கு அரச ஊடகங்களை மிகப் புத்தி சாதுரியமாகப் பயன்படுத்தி கொண்டனர் சிங்களத் தலைவர்கள்.

வலது கையால் கொடுக்க நினைப்பது போல் பாசாங்கு காட்டி, அரச ஊடகங்களைத் தமக்கெதிராகச் செயற்படச் செய்து இனவாதிகள் மத்தியில் எதிர்ப்பலைகளை உருவாக்கித் தாம் கொடுக்க நினைத்ததை இடது கையால் பறித்தெடுத்தனர். அதற்குப் பேரினவாதிகளையும் பௌத்த துறவிகளையும் பயன்படுத்திக் கொண்டனர்.

இந்தச் செயற்பாடுகளைப் பிரபல்யமாக ஆரம்பித்து வைத்தவர் முன்னாள் ஜனாதிபதி ஜெ.ஆர். ஜயவர்த்தனா ஆவார். இவருக்கு முன்பிருந்த அரசுத் தலைவர்கள் இதே செயற்பாட்டைச் செய்தீருந்தாலும் அதனைப் புத்தி சாதுரியமாகச் செய்து வெற்றி கண்டவர் ஜெ. ஆர் ஆவார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக மாவட்ட சபைகளைக் கொடுப்பதுபோல் கொடுத்துப் பறித்தெடுத்தார்.


இனக் கலவரங்களைத் தூண்டிவிட்டார். இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் இந்தியப் பிதமர் ராஜிவ் காந்திக்குத் திரு. நாராயணன், திரு. திக்சித் மூலம் ஆலொசனைகளை வழங்கிப் பல சுழுக்குப் பிடிகளை ஒப்பந்தத்தில் செருக வைக்கக் காரணமாய் இருந்தார்.

இதனைப் பயன்படுத்தி 1990 ஆம் ஆண்டு முதலமைச்சரின் ஆலோசனை இன்றி மாகாண சபைகளை அவசர நிலையில் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி ஆர்.பிறேமதாச பாராளுமன்றத்தின் மூலம் பெற்றுக் கொண்டார்.

இதேபோல் இன்னும் பலவற்றை நடத்திப் 13 ஆம் திருத்தத்தை "கழுதை தேய்ந்து கட்டெறும்பான" நிலைக்கக் கொண்டு வந்து விட்டிருக்கின்றனர.

மத்தியில் ஒற்றையாட்சி மாகாணங்களில் அதிகாரப் பரவலாக்கம் பற்றி ஆராய்வதற்காக 1992 இல் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை ஆர் . பிறேமதாச நியமித்தார்.

அதன் அறிக்கை வெளிவருவதற்கு முன்பாகவே அரச ஊடகங்களைப் பயன்படுத்திப் புரளியைக் கிழப்பித் தடுத்து விட்டனர். அதேபோல் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சு வார்த்தை (2002 - 2005 வரை) நடைபெற்றுக் கொண்டிருந்த போது விடுதலைப் புலிகள் அமைப்பை வெளிநாடுகளில் தடை செய்வதற்கும் புலிகள் அமைப்பைப் பிரித்துச் சிதைப்பதிலும் ரனில் விக்கிரமசிங்க வெற்றி கண்டார்.



மாமன் ஜெ.ஆர். ஜெயவர்த்தனா பின்பற்றிய இராஜதந்திரங்கள் அனைத்தையும் அதற்கு மேலாகவும் ரனில் விக்கிரமசிங்கா செய்து கொண்டிருக்கிறார்.

மகிந்த ராஜபக்ச இந்தியா, அமெரிக்க, சீனா, ரசியா, பாகிஸ்தான் ஆகிய பதினேழு நாடுகளின் துணையுடன் 2009 இல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.



இறுதி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் இந்தியாவின் பங்கு அளப்பெரியது.

யுத்தம் மௌனிக்கப்பட்டதும் மகிந்த ராஜபக்ச அரசியல் கைதிகள் விடுதலை, வடக்கு, கிழக்கு அபிவிருத்தி, மிள் குடியேற்றம், புனர்நிர்மானம், காணிகளை விடுவித்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல், பொறுப்புக் கூறல், 13 பிளஸ் என்றெல்லாம் இந்தியாவுக்கும் வெளிநாடுகள், ஐக்கிய நாடுகள் சபைக்கும் பல வாக்குறுதிகளை வழங்கி ஒன்றையும் நடைமுறைப்படுத்தாமல் தட்டிக் கழித்தார்.

அத்தோடு இவரின் காலத்தில் இந்துக் கோயில்கள், பள்ளி வாசல்கள், கிறிஸ்த்தவ தேவாலயங்கள் பல உடைக்கப்பட்டுக் கௌ்ளையிடப்பட்டன.

கோட்டாபய ராஜபக்ச இராணுவ மிடுக்கில் தான் சிங்கள மக்களின் வாக்குகளால் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டவன் என்ற கர்வத்தொடு ஆட்சியைக் கொண்டு நடத்தினார். தமிழ் முஸ்லிம் மக்களை முற்று முழுதாகப் புறக்கணித்தார்.



அமைச்சுப் பதவிகளில் முஸ்லிம்களுக்கு எந்த இடமும் இல்லாமலாக்கினார். இப்படிப்பட்ட ஒருவரிடம் இருந்து சிறுபான்மையினருக்கு உரிமை கிடைக்கும் என எதிர்பார்க்கவும் முடியாது. அவ்வாறுதான் அவரும் நடந்து கொண்டார்.

சுதந்திரத்துக்குப் பின்னரான ஆட்சியில் ஆட்சியாளர்கள் செய்த தவறுகள் யாவும் இன்று விஸ்வரூபம் எடுத்து அரசியல் பொருளாதாரச் சீரழிவில் நாட்டைக் கொண்டு போய் நிறுத்தி இருக்கின்றன. இவை சீர் செய்யப்படுவதற்கு நாட்டில் அமைதியும், ஒற்றுமையும், சகவாழ்வும் அவசியமாகின்றது.

1948 ஆம் ஆண்டு நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரத்தை சிறுபான்மையினரின் நலன்கள் பேணப்படும் வகையிலான திட்டங்களை வகுத்து, அரசியல், பொருளாதாரம், கல்வி, சட்டவாக்கம், சட்ட அதிகாரம், சட்ட நிறைவேற்றம் என்பவற்றில் சிறுபான்மையினரின் தேசியம், தனித்துவம், சுயநிர்ணய உரிமை என்பவற்றோடு வாழத்தக்க வகையிலான அதிகாரப் பகிர்வினை வழங்கும் போதுதான் சிறுபான்மையினரின் சுதந்திமும் உரிமையும் சாத்தியமாகும்.

அதுவே, சிறுபான்மையினரின் நலன் பேணப்படுவதாக அமையும் என்பது உறுதியானதாகும். அப்போதுதான் சுதந்திரக் காற்றைச் சகல மக்களும் அனுபவித்தவர்களாக ஆவார்கள். இல்லையெனில் இலங்கையில் சுதந்திர தினம் என்பது வெறுமனே பெரும்பான்மையினருக்கு உரிய ஒன்றாகவே வெளிப்படுத்தப்படும்.

Freedom என்பதற்கும் Independence, Liberty என்பதற்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. Freedom, Independence, Liberty ஆகிய சொற்கள் ஒரே பொருளில் நோக்கப்பட்டாலும் அடிப்படையில் வேறுபாடு கொண்ட சொற்களாகவே கொள்ளப்படுகின்றன.

Independence என்பது "வேறொருவரின் ஆதிக்கத்திற்கு உட்படாத நிலை. பிறருடைய கட்டுப்பாடோ மேலாதிக்கமோ இல்லாத நிலை. அந்நியர் ஆட்சியில் இருந்து விடுபட்ட நிலை. போராட்டத்தின் மூலம் விடுதலை பெற்றுக் கொண்ட நாடு" எனப் பொருள் கொள்ளலாம்.

Freedom என்பது "ஒரு மனிதன் சுய கட்டுப்பாடுகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு ஏனையவர்களின் சுதந்திரத்திற்குப் பங்கம் ஏற்படாத வகையில் தான் விரும்பியதைச் செய்வதற்கான உரிமைகளைச் சுதந்திரம் என்பதாக அறிஞர்கள் வரைவிலக்கணப்படுத்தி உள்ளனர். முன்னையது நாட்டின் சுதந்திரத்தையும் பின்னையது தனிமனித சுதந்திரத்தையும் உள்ளடக்கியதாக அமைந்திருக்கின்றன.

"Preedom is in invisible word. If we want to enjoy it and fight for it. We must be prepared to extend it to everyone. Whether the rich or poor, whether the agree with us or not no matter what their race or colour of their skin". W.L Willkie என்பவரின் வரைவிலக்கணமாகும். Liberty என்பதும் சுதந்திரம் என்பதன் கருத்தாகவே அமைகின்றன. "உள்ளக, வெளியார் தலையீடுகள் அற்ற வகையில் சுயாதீனமாகவும், தேசியம், தனித்துவம், நம்பிக்கையுடன் உரிமைகளோடு வாழ்வதைக் குறிக்கும்." இந்த அடிப்படையில் பார்க்கின்ற போது சிறுபான்மையினர் இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து இன்றுவரை சுதந்திரக் காற்றை முழுமையாக அனுபவிக்கவில்லை என்பதே யதார்த்தமாகும்.

அதிலும் குறிப்பாக இலங்கைத் தமிழர்களும் மலையகத் தமிழர்களும் சுதந்திரம், சுயாதீனம், தேசியம், தனித்துவம், உரிமை என்பதனை முழுமையாக அனுபவிக்காதவர்களாகவே வாழ்திருக்கின்றார்கள். வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

2010 இன் பின்னர் இருந்து இன்றுவரை இலங்கை முஸ்லிம்களுக்கும் இதே நிலமைதான் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. காலத்திற்குக் காலம் பேரினவாதிகளும் பௌத்த அடிப்படைவாதிகளும் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையைப் பறித்தெடுப்பதிலேயே குறியாக இருந்திருக்கின்றனர். இதனால்தான் சிறுபான்மையினர் பெரும்பாலானோரிடத்தில் தேசிய உணர்வினைக் கட்டியெழுப்ப முடியாமல் இருக்கின்றன. அரசியல்வாதிகளும் பேரினவாதிகளும் இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து இன்றுவரை சிறுபான்மை மக்கள் தொடர்பாகப் பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடித்து பிரித்தாண்டு வந்திருக்கின்றனர்.

–முற்றும் –




# சமபோஷ மாகாண பாடசாலை விளையாட்டுப் போட்டி

CBL நிறுவனத்தின் உப நிறுவனமான Plenty Foods (Pvt) Limited நிறுவனத்தின் முன்னணி தயாரிப்பான சமபோஷ வலுவூட்டலுடன் ஊவா, வடமத்திய, கிழக்கு, வடமேல் மற்றும் தெற்கு ஆகிய 5 மாகாணங்களை மையமாகக் கொண்டு நடத்தப்படும்" 2023 சமபோஷ மாகாண பாடசாலை விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஆகஸ்ட் 15 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதில் 70 ற்கும் மேலான போட்டி நிகழ்வுகளில் 650 ற்கும் அதிகமான பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 18 ஆயிரத்திற்கும் அதிகமான வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வெற்றிபெறும் பாடசாலைகள் மற்றும் வீர வீராங்கனைகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சின் விளையாட்டுப் பணிப்பாளர் உபாலி அமரதுங்க எதிர்கால சந்ததியினர் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதன் மூலம் மாகாணங்கள் மாணவர்கள் தேசிய மட்டத்தை அடைவதற்கு CBL வழங்கிவரும் ஒத்துழைப்பை பாராட்டுகிறோம் என்றார்.

# சலுகைகள் மேலும் அதிகரிப்பு

Airtel Sri Lanka, தமது வாடிக்கையாளர்கள் செலுத்தும் பணத்திற்கு தொடர்ந்து மதிப்பு சேர்க்கும் வகையில், எயார்டெல் அதன் முற்கொடுப்பனவான ரூ. 888 Freedom Plus பெக்கேஜில் மூன்று பிரபலமான சமூக வலைத்தளங்களின் Appsகளைச் சேர்த்துள்ளது,

Telegram, IMO மற்றும் Viber ஆகிய மூன்று சமூக ஊடக Appsகளுக்கு வரையறையற்ற அணுகலை அனுபவிக்க வசதியளிக்கிறது.

இது குறித்து கருத்து தெரிவித்த எயார்டெல் ஸ்ரீலங்காவின் முகாமைத்துவ பணிப்பாளர்ஃபிரதம நிறைவேற்று அதிகாரி அஷிஷ் சந்திரா, வாடிக்கையாளர்களிடமிருந்து எங்களுக்கு அதிக தேவை இருப்பதால், இப்போது பிரபலமான பயன்பாடுகளான Viber, IMO மற்றும் Telegram ஆகியவற்றை இந்த பெக்கேஜில் சேர்த்துள்ளோம். வாடிக்கையாளர்கள் இப்போது இந்த அதிகமான சேவைகளை மலிவு விலையில் ரூ. 888 இல் அனுபவிக்க முடியும்,

TikTok, Instagram, குயஉநடிழழம, YouTube, Messenger, WhatsApp,




Viber, ஐMO மற்றும் Telegram போன்ற பிரபலமான சமூக ஊடக தளங்களுக்கு வரையறையற்ற அணுகலை வழங்குவதன் மூலம், எங்கள் வாடிக்கையாளர்கள் அந்த Appsகளைப் பயன்படுத்தும் முறையையோ அல்லது தனித்தனியாக கொள்முதல் செய்வதையோ மாற்ற வேண்டியதில்லை எனத் தெரிவித்தார்.

# TikTokஇன் Community Guidelines

TikTok, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் (ஜனவரி-மார்ச் 2023) தனது சமீபத்திய சமூக வழிகாட்டுதல்கள் அமலாக்க (Community Guidelines Enforcement Report) அறிக்கையை வெளியிட்டுள்ளது,

தவறான தகவலை எதிர்த்துப் போராடுவதற்கும் பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய இடத்தை உருவாக்குவதற்கும் அதன் அர்ப்பணிப்பை மேலும் மேம்படுத்துகிறது. பொறுப்புக்கூறல் மூலம் நம்பிக்கையைப் பெறுவதற்கும் அதன் சமூகத்திற்கு பாதுகாப்பான மற்றும் வரவேற்கத்தக்க சூழலைப் பேணுவதற்கும் வுமைவுழம இன் தற்போதைய உறுதிப்பாட்டை அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், உலகளவில் மொத்தம்




91,003,510 வீடியோக்கள் அகற்றப்பட்டன, இது TikTok இல் பதிவேற்றப்பட்ட அனைத்து வீடியோக்களிலும் சுமார் 0.6% ஆகும். இவற்றில், 53,494,911 வீடியோக்கள் தானியங்கி அமைப்புகள் மூலம் அகற்றப்பட்டன, அதே நேரத்தில் 6,209,835 வீடியோக்கள் மதிப்பாய்வுக்குப் பிறகு மீட்டெடுக்கப்பட்டன.

உலகளவில், இளம் பாவனையாளர்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து, 13 வயதுக்குட்பட்ட பாவனையாளர்களுக்கு சொந்தமானதாக ஐயப்படும் 16,947,484 கணக்குகளை வுமைவுழம நீக்கியுள்ளது. மேலும், முதல் காலாண்டில் 51,298,135 போலி கணக்குகள் அகற்றப்பட்டன, இது மோசடி நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கான வுமைவுழம இன் முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.

# பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமமாக Prime Land

இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளரான Prime Land Residencies, இலங்கையின் மிகப் பெறுமதி வாய்ந்த நுகர்வோர் வர்த்தக நாமங்கள் 2023 இல் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

LMD உடன் இணைந்து வர்த்தக நாம பெறுமதி ஆலோசனை நிறுவனமான Brand Finance முன்னெடுத்திருந்த வருடாந்த மீளாய்வில் Prime Land Residencies, மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

The Brand Finance: LMD 2023 வருடாந்த இலங்கையின் 100 மிக பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள் வரிசையில் mover மற்றும் shaker ஆக, கடந்த ஆண்டின் தரப்படுத்தல்களுடன் ஒப்பிடுகையில் நான்கு நிலைகள் முன்னேறி, 60ஆம் ஸ்தானத்தில் Prime Residencies தரப்படுத்தப்பட்டிருந்தது.

ரியல் எஸ்டேட் துறையில் மிகவும் பெறுமதி வாய்ந்த ரியல் எஸ்டேட்




நுகர்வோர் வர்த்தக நாமமாகவும் Prime Residences தெரிவு செய்யப்பட்டிருந்தது. ரியல் எஸ்டேட் சந்தையில் வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற தரம் மற்றும் பெறுமதியை பெற்றுக் கொடுப்பதில் நிறுவனம் காண்பிக்கும் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கு கிடைத்த மைல்கல் சாதனையாக இது அமைந்துள்ளது.

மாற்றமடைந்து வரும் சந்தை சவால்கள் நிறைந்த சூழலில், முன்னணி வர்த்தக நாமங்களினால் பின்பற்றப்பட்டிருந்த மாற்றியமைப்பு மற்றும் பின்பற்றுகை தொடர்பில் 'The Courage to Change,' எனும் தொனிப்பொருளில் அமைந்திருந்த அறிக்கை கவனம் செலுத்தியிருந்தது.

# டெண்டுல்கர் இலங்கை பிள்ளைகளுடன் ...!!!






யுனிசெப்பின் தெற்காசியப் பிராந்தியத்தின் நல்லெண்ணத் தூதுவர் என்ற வகையில் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் இலங்கைக்கு விஜயம் செய்தார். சப்ரகமுவ மாகாணத்தில் யுனிசெப் அமைப்பினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு விஜயம் செய்த சச்சின், கொவிட் தொற்று நோய் மற்றும் 2022 பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களைச் சந்தித்தார். கிரிக்கெட் வீரராகவும், 2015ஆம் ஆண்டு யுனிசெப் அமைப்புடனும் இணைந்து இலங்கைக்கு மேற்கொண்ட முன்னைய விடயங்களில் ஏற்பட்ட அனுபவங்களை டெண்டுல்கர் நினைவுகூர்ந்தார். சவால் மிக்க சூழலுக்கு மத்தியிலும் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எடுக்கும் முயற்சிகளையும் அவர் பாராட்டினார். கள விஜயத்தின் போது யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் மதிய உணவுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் முன்பள்ளிகளுக்கும் சச்சின் டெண்டுல்கர் சென்றிருந்தார்.

சிரேஷ்ட மாணவமாணவியருடன் சச்சின் டெண்டுல்கர் கிரிகெட் விளையாட்டிலும் இணைந்துகொண்டார்.



# நீண்ட கால வளர்ச்சி வாய்ப்புகளை பூர்த்தி செய்யும் கொழும்பு துறைமுக நகரம்

துறைமுக நகரம் என்பது சேவைகளை ஏற்றுமதி செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட, வெளிநாட்டு நாணயத்தில் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வலிமை பெற்ற முதலாவது விசேட பொருளாதார வலயமாகும்.

இந்த செயற்திட்டத்தை முன்னெடுக்கும் நிறுவனமான CHEC Port City Colombo இன்றுவரை, 1.3 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையை கடலிலிருந்து நிலத்தை மீட்பதற்காக முதலீடு செய்துள்ளதுடன் மற்றும் அனைத்து உள்ளக பயன்பாட்டு மற்றும் உள்கட்டமைப்பு பணிகளை பூர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பில் CHEC Port City Colombo (Pvt) Ltd நிறுவனத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. துல்சி அலுவிஹார அவர்கள் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

கடலிலிருந்து நிலத்தை மீட்கும் நடவடிக்கைகள் முற்றுப்பெற்றதும், 269 ஹெக்டேயர் நிலம் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கொழும்பு துறைமுக நகரம் பொருளாதார ஆணைக்குழு சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் சார்பில் ஆணைக்குழுவிடம் காணி கையளிக்கப்பட்டது.

எனவே 269 ஹெக்டேயர் நிலம் இலங்கை அரசுக்கு சொந்தமானது. CHEC CPCC க்கு எந்த காணி உரிமையும் இல்லை, ஆனால் இந்நிறுவனம் மேற்கொண்ட முதலீட்டை மீட்டெடுப்பதற்கு ஈடாக, அதாவது இன்றுவரை முதலிடப்பட்ட சுமார் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர் தொகைக்கு ஈடாக, சில பகுதிகளுக்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

இது சுமார் 116 ஹெக்டேயர் என்பதுடன், இதில் 46 நிலப்பகுதிகளின் மூலம் முதலீட்டை மீட்க முடியும்.

எனவே துறைமுக நகரத்தினுள் இருக்கும் நில உரிமையாளர் மற்றும் குத்தகைதாரர் எப்பொழுதும் இலங்கை அரசாங்கம் அல்லது இலங்கை அரசின் சார்பாக ஆணைக்குழுவே செயல்படும்.

# பிளாஸ்ரிக் கழிவுகளை தணிப்பதற்காக Eco Spindles உடன் ஹேமாஸ் கைகோர்ப்பு




கொழும்பு மற்றும் அம்பாறையில் நவீன வசதிகள் படைத்த இரு அழுத்தும் பகுதிகளை நிறுவ ஹேமாஸ் குழுமம், Eco Spindles உடன் கைகோர்த்துள்ளது.

மாதாந்தம் 25,000கிலோகிராம்களுக்கு அதிகமான பிளாஸ்ரிக் கழிவுகளை திரட்டுவதை இலக்காகக் கொண்டு இந்த மூலோபாய கைகோர்ப்பு அமைந்துள்ளது. குழுமத்தின் சூழலுக்கு நட்பான நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், பொறுப்பு வாய்ந்த பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை ஊக்குவிப்பதை பிரதான இலக்காக அமைந்துள்ளது.

நுகர்வோர் பிளாஸ்ரிக் கழிவுகளை இல்லாமல் செய்வதற்கான உறுதியான அர்ப்பணிப்பின் பிரகாரம், ஹேமாஸ் குழுமம், Eco Spindles உடனான இந்த பங்காண்மையை பிளாஸ்ரிக் கழிவுகளை திரட்டி அவற்றை பொறுப்பு வாய்ந்த வகையில் இல்லாமல் செய்யும் தமது முயற்சியில் முக்கிய மைல்கல்லாக கருதுகின்றது.

இந்த இரு அழுத்தும் பகுதிகளில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளத னூடாக, தனது பிளாஸ்ரிக் கழிவு சேகரிப்பு செயற்பாடுகளை மேம்படுத்த நிறுவனம் திட்டமிட்டுள்ளதுடன், தேசிய தன்னார்வ நீடிப்பு உற்பத்தியாளர் பொறுப்புணர்வு திட்டத்துக்கு (EPR) ஆதரவு வழங்கவும் முன்வந்துள்ளது.

சுழற்சியான பொருளாதார மாதிரியை கட்டியெழுப்புவது, கழிவு மற்றும் மாசை தணிப்பது போன்றவற்றில் இந்த வசதிகள் முக்கிய பங்காற்றும் என்பதுடன், பயனுள்ள தயாரிப்புகள் மற்றும் மூலப் பொருட்களின் ஆயுளை நீடிப்பதாகவும் அமைந்திருக்கும். மேலும், இந்த இரு பகுதிகளின் நிறுவுகையினூடாக, சூழவுள்ள சமூகங்களில், குறிப்பாக கழிவு சேகரிப்பாளர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.




# HNB இன் 800வது ஸ்மார்ட் சுயசேவை இயந்திரம்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே அக்குரேகொடவில் உள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்திற்குள் அமைந்துள்ள டிஜிட்டல் வங்கி வலயத்தில் பண மீள்சுழற்சி இயந்திரத்தை (Cash Recycle Machine - CRM) HNB அண்மையில் திறந்து வைத்தது.

CRM ஆனது HNB இன் 800வது சுயசேவை இயந்திரமாக (Self Service Machine -SSM) HNB இன் சேவை வழங்குவதில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது.

இந்த மேம்பட்ட வசதி வளாகத்தில் பணிபுரியும் ஏராளமான பணியாளர்களுக்கு, பணம் மீள எடுப்பது, வைப்பு செய்வது, நிகழ்நேர நிதிப் பரிமாற்றங்கள், கிரெடிட் கார்டு செட்டில்மென்ட்கள், கையடக்க தொலைபேசி ஊடாக பணப் பறிமாற்றம், மொபைல் ரீலோட்கள், மற்றும் பிற கட்டண செலுத்தல்கள் போன்ற சுய-வங்கித் தேவைகளுக்கு வசதியான சேவையை வழங்கும்.

# பெருநாடி மாற்றீட்டுக்கான உயிர்காக்கும் TAVI இருதயச் செயன்முறை



ஆசிரி சர்ஜிக்கல் வைத்தியசாலை (Asiri Surgical Hospital) சிக்கலான இருதயச் செயன்முறை ஒன்றான Advanced Transcatheter Aortic Valve Implantation (TAVI) இனை ஏற்கனவே பைபாஸ் அறுவை சிகிச்சைக்கு உட்பட்டிருந்த நோயாளர் ஒருவருக்கு வெற்றிகரமாக மேற்கொண்டது.

தசாப்தங்களாக பெருநாடி மாற்றீட்டுக்கு இருதயத் திறப்பு அறுவை சிகிச்சைகளையே மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், குறைந்தபட்ச ஊடுருவல் செயன்முறையான TAVI சாதகமான பெறுபேறுகளை வழங்கி ஒரு காலத்தில் இருதயத் திறப்பு அறுவை சிகிச்சைக்கு தாக்குப்பிடிக்க மாட்டார்கள் என்று கருதப்பட்ட நோயாளர்களுக்கு நம்பிக்கையையும் மேம்படுத்தப்பட்ட வாழ்கைத் தரத்தையும் பெற்றுத்தருகிறது.

இந்த செயன்முறையை மிகுந்த திறமையும் அனுபவமும் மிக்க இருதயநோய் மருத்துவ ஆலோசகர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க, நிபுணத்துவமிக்க மருத்துவக் குழுவினருடன் இணைந்து மேற்கொண்டிருந்தார்.

இந்த முக்கியத்துவமான மற்றும் வெற்றிகரமான பெறுபேறு சிக்கலான இருதய நிலைமைகளைக் கொண்ட நோயாளர்களிடத்தில் மீண்டும் நம்பிக்கையை விதைத்துள்ளது. மேலும் இந்தச் செயன்முறையானது மருத்துவ முன்னேற்றத்தின் எல்லைகளை விஸ்தரித்து நோயாளர்களுக்கு அதிநவீன தீர்வுகளைப் பெற்றுத்தருவதில் மருத்துவமனை கொண்டுள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

ஆசிரி சர்ஜிக்கல் வைத்தியசாலையில் இடம்பெற்ற சமீபத்திய வுயுஏஐ செயன்முறையானது ஏழு ஆண்டுகளுக்கு முன் பைபாஸ் சத்திர சிகிச்சைக்கு உட்பட்ட 74 வயதானவருக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவரது மருத்துவப் பதிவுகளின் காரணமாக இன்னுமொரு இருதயத் திறப்பு அறுவை சிகிச்சைக்கு அவர் பொருத்தமற்றவராகக் கருதப்பட்டார். எனினும்,வுயுஏஐ செயன்முறையின் காரணமாக, தனது நோய்கணிப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை கணிசமானளவு மேம்படுத்தும் உயிர்காப்பு சிகிச்சைத் தெரிவொன்றை அவர் பெற்றுக்கொண்டார்.

# 25 ஆண்டுகளைக் கொண்டாடும் க்ளோகார்ட்




Hemas Consumer Brands இன் நம்பகமான வாய்ச் சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமமான க்ளோகார்ட் (Clogard), இலங்கை பல்மருத்துவ சங்கத்தின் (SLDA) தொடர்ச்சியான 25ஆவது வருட அங்கீகாரத்தை கொண்டுள்ளமையை பெருமையுடன் அறிவிக்கிறது.




கடந்த கால் நூற்றாண்டாக நீடித்து வரும் அசைக்க முடியாத கூட்டாண்மையுடன், வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும், புத்தாக்கமான திட்டங்கள் மூலம் பற்குழி அற்ற தேசம் தொடர்பான அதன் தூரநோக்கை உணர்த்துவதற்கும் க்ளோகார்ட் உறுதியுடன் செயற்பட்டு வருகின்றது.

க்ளோகார்ட் நீண்ட காலமாக கொண்டுள்ள SLDA சான்றிதழானது, வாய்ச் சுகாதாரத்தின் மிக உயர்ந்த தரத்தை நிலைநிறுத்துவதில் அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக அமைகின்றது.

க்ளோகார்ட் பல ஆண்டுகளாக SLDA உடன் தீவிரமாக ஒத்துழைத்து வருவதன் மூலம், வாய்ச் சுகாதார விழிப்புணர்வு மற்றும் பல் பராமரிப்பு நடைமுறைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகிறது.